**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு.எம்.தனபால், பி.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2024–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் திங்கட்கிழமை**

**E.A.No.21/2024**

**in**

**E.P.No.19/2022**

**in**

**O.S.No.190/2011**

----

1. குப்புச்சாமி
2. குப்பாத்தாள் ...... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மாரிமுத்து
2. முனியப்பன் ...... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் E.P.No.19/2022–இல் இ.ம.எண்.21/2024 ஆக 11.03.2024 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராமராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்கள் தரப்பில் அசல் நிறைவேற்று மனுவில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அசல் நிறைவேற்று மனுவினை மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1–யை மீண்டும் அழைத்து உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–இன் படி மனுதாரர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிகையின் சுருக்கம்**

1 ஆம் மனுதாரர் அசல் நிறைவேற்று மனுவில் மனுதாரர் என்றும், 1 ஆம் மனுதாரர், அவருக்காகவும், 2 ஆம் மனுதாரருக்காகவும் சேர்ந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக அசல்வழக்கு தாவா பாதையை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல்வழக்கு தாக்கல் செய்து முழுவிசாரணைக்கு பின்னிட்டு மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றும், தீர்ப்பாணைக்கு பின்பும் எதிர்மனுதாரர்கள் அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை மதிக்காமல் மனுதாரர் தாவா பாதையை அனுபவிப்பதை தடை மற்றும் இடையூறு செய்து வந்ததால் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல்நிறைவேற்று மனு தாக்கல் செய்து, எதிர்மனுதாரர்களை கைது செய்து சிவில் சிறைச்சாலையில் காவல்படுத்த உத்தரவிட வேண்டி அசல்நிறைவேற்று மனுவை தாக்கல் செய்ததாகவும், மனுதாரர்கள் தரப்பில் 17.02.2023 ஆம் தேதி மனுதாரர்கள், அவரது முதல்விசாரணை செய்து நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், கடந்த 06.03.2023 ஆம் தேதி தனது தரப்பில் ஒரு வேலுச்சாமியை ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு மனுதாரர்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்தரப்பு விசாரணைக்காக அசல்நிறைவேற்று மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தாவா பாதையை பயன்படுத்தவிடாமல் தடை, இடையூறு செய்த காரணத்தினால் மனுதாரர், எதிர்மனுதாரர்கள் மீது சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் 22.12.2011, 16.05.2012 ஆம் தேதிகள் புகார் கொடுக்கப்பட்டும், கடந்த 28.02.2024 ஆம் தேதி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து விசாரணை நடைபெற்று வருகிறது என்ற ஆவணங்களையும், 11.09.1959 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தையும் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் தற்போதுதான் தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், எனவே அசல்நிறைவேற்று மனுவில் மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு

செய்ய மீண்டும் ம.சா.1–யை அழைத்து செய்து உத்தரவிட கோரி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1 ஆம் எதிர்மனுதாரரால் தழுவி ஏற்றுக்கொள்வதாக மேற்குறிப்பு செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்**

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள் எந்தவகையிலும் நீதிமன்ற உத்தரவை அவமதிப்பு செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணையும் செய்யப்பட்டு சாட்சியம் முடிக்கப்பட்டு உள்ள நிலையில் மனுதாரர் கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், 11.09.1959 ஆம் தேதிய பத்திரம் மற்றும் காவல்நிலைய ரசீதுகள், அசல்வழக்கிற்காக அவசியம் என்றால் அசல்வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கப்படும் என்றும், அசல்வழக்கில் தாக்கல் செய்யாமல் நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்ய அசல்நிறைவேற்று மனுவில் ம.சா.1–யை மீண்டும் அழைக்க தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் அசல்வழக்கில் தாக்கல் செய்யாமல் தற்போது எதிர்மனுதாரர்களை துன்புறுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று தெரிவித்து எதிர்மனுஉரை தாக்கல் செய்துள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிடப்படவில்லை.

**6. பிரச்சனைக்குரிய தீர்வு :–**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா பாதையை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல்வழக்கு தாக்கல் செய்து முழுவிசாரணைக்கு பின்னிட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணைக்கு பின்பும் மனுதாரர் தீர்ப்பாணையில் குறிப்பிட்டுள்ள பாதையை பயன்படுத்துவதை தடை மற்றும் இடையூறு செய்து வந்தார்கள் என்றும், அசல்நிறைவேற்று மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், மனுதாரர் தரப்பில் ஒரு வேலுச்சாமி, ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு மனுதாரர்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சியத்திற்காக அசல்நிறைவேற்று மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தாவா பாதையை பயன்படுத்தவிடாமல் தடை, இடையூறு செய்து வந்தது குறித்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக 22.12.2011, 16.05.2012 ஆம் தேதிகள் புகார் கொடுத்தும் விசாரணை நடைபெற்று வருவதற்கான ஆவணங்களையும், தாவா பாதை சம்பந்தமாக 11.09.1959 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் தற்போததான் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பிற்கு இன்றியமையாத ஆவணங்கள் என்றும், எனவே அசல்நிறைவேற்று மனுவை மனுதாரர்கள் தரப்பில் மீண்டும் ம.சா.1–யை அழைத்து உத்தரவிட வேண்டி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**7.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள் எந்தவகையிலும் நீதிமன்ற உத்தரவை அவமதிப்பு செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக அசல்நிறைவேற்று மனு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில்

மனுதாரர் அசல்நிறைவேற்று மனுவில் மீண்டும் ம.சா.1–யை அழைத்து உத்தரவிட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 11.09.1959 பத்திரம் மற்றும் காவல்நிலையத்தில் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள ரசீதுகள், அசல்வழக்கில் தாக்கல் செய்திருப்பார் என்றும், அவ்வாறு இல்லாமல் மேற்படி ஆவணங்களை அசல்வழக்கில் குறியீடு செய்யாமல் எதிர்மனுதாரர்களை துன்புறுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8.** இந்நிலையில் இந்நிறைவேற்று மனு வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல்வழக்கு எண்.190/2011–இல் பிறப்பிக்கப்பட்ட நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்மனுதாரர்கள் மீறி, மனுதாரர்களுக்கு தடையும், இடையூறும் செய்து வருவதாக குறிப்பிட்டு எதிர்மனுதாரர்களை கைது செய்து சிவில்சிறையில் காவல்படுத்த உத்தரவிட கோரி அசல்நிறைவேற்று மனுவை 2013 ஆம் ஆண்டு தாக்கல் செய்து, நீதிமன்ற ஆள்வரை எல்கையின் காரணமாக திண்டுக்கல் மாவட்ட நீதிமன்ற உத்தரவின்பேரில் அசல்நிறைவேற்று மனு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மனுதாரர்கள்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக அசல்நிறைவேற்று மனு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு பின்பும் எதிர்மனுதாரர்கள் மனுதாரர் பயன்படுத்துவதை இடையூறு செய்து வருகிறார்கள் என்றும், மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு மனுதாரர்கள்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக அசல்நிறைவேற்று மனு

ஒத்திவைக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர்கள், மனுதாரர் பாதையை பயன்படுத்துவதை இடையூறு செய்தது சம்பந்தமாக சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் அசல்நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள பாதை எதிர்மனுதாரர்களுக்கு உரிமை இல்லை என்பதற்கான 11.09.1959 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் ஆகியவை தற்போதுதான் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள்தரப்பிற்கு அவசியமான ஆவணங்கள், அதனால் குறியீடு செய்ய இயலாமல் போய்விட்டது என்றும் கூறியுள்ளார். இருப்பினும் எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு பாதையை பயன்படுத்துவதை இடையூறு செய்தது சம்பந்தமாக சத்திரப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மற்றும் புகார்மனு ரசீதுகள் மற்றும் 11.09.1959 ஆம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் ஆகியவை தற்போதுதான் தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், அதனால் மனுதாரர்கள் தரப்பில் விசாரணையின்போது குறியீடு செய்ய இயலாமல்போய்விட்டது என்ற காரணங்களை கருத்திற்கொண்டும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்திற்கொண்டும், மனுதாரர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை கீழ்க்கண்ட நிபந்தனையின் கீழ் அனுமதித்து பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**9.** இறுதியாக, மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.1,000/-யை எதிர்மனுதாரர்கள் தரப்பிற்கு வருகின்ற 05.06.2024 ஆம் தேதிக்கு செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் இந்த உத்தரவானது தானாக ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க **07.06.2024.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2024-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.04.29 13:36:52 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்

**<u>10. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்–இல்லை</u>**

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2024.04.29 13:36:57 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

E.A.No.21/2024 in
E.P.No.19/2022
Sub Court, Oddanchatram.
29.04.2024
Order (Fair/Draft)